**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.693/2024**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஷ்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஞானப்பிரகாஷ் | தொழில் | : | கோழிப்பண்ணையில் வேலை |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 17th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோழிப்பண்ணையில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி உஷா எனது அம்மா ஆவார். 27.10.2020 அன்று பகல் 10.00 மணியளவில் நான் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது, எதிரிகள் அவர்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள ரோட்டில் ஆட்டோவில் அண்டா போன்ற பொருட்களை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். ஆட்டோவை ரோட்டிற்கு குறுக்காக விட்டிருந்தார்கள். நான் சென்ற பைக்கில் ஹாரன் அடித்தேன். உடனே எதிரிகள் "உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என்று கூறி எதிரி வைகுண்டமணி சட்டாப்பையால் என்னுடைய கழுத்தில் அடித்தார். "தேவடியா மவனே, அந்த மவனே" என்று வைகுண்டமணி கெட்ட வார்த்தைகளால் திட்டினார். எதிரிகளின் பக்கத்து வீடு தான் எங்களுடைய வீடு. நான் வீட்டிற்கு வந்தேன். அம்மாவிடம் சொன்னேன். நான் சொல்லி முடிப்பதற்கு முன்பாக எதிரிகள் என்னுடைய வீட்டு

வாசலுக்கு வந்தார்கள். செல்லத்துரை என்னையும், என் தம்பியையும், அம்மாவையும் பார்த்து "உங்கள் 3 பேரையும் கொல்லாமல் விடக்கூடாது" என்று கூறினார்கள். எதிரி பரமசிவம் என்னுடைய சட்டையை பிடித்து இழுத்தார். எதிரி வைகுண்டமணி கையாலும், கம்பாலும் என்னுடைய முதுகிலும், கழுத்திலும், தொடையிலும் அடித்தார்.

என்னுடைய அம்மா தடுக்க வந்தார். என்னுடைய அம்மாவை வருச்சி கம்பால் வைகுண்டமணி அடித்தார். என்னுடைய அம்மாவின் இடது கை விரல் ஒடிந்து தொங்கியது. நானும், என்னுடைய அம்மாவும் பைக்கில் கடையம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தென்காசிக்கு அனுப்பி வைத்தார்கள். தென்காசி அரசு மருத்துவமனையில் 10 நாட்கள் உள்நோயாளியாக நானும், அம்மாவும் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.19 13:19:04 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.693/2024**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரவீன்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஞானப்பிரகாசம் | தொழில் | : | தனியார் நிறுவனத்தில் வேலை |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 17th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி உஷா எனது அம்மா ஆவார். 27.10.2020 அன்று காலை 10.00 மணியளவில் என்னுடைய அண்ணன் சதீஷ்குமார் நர்சை பார்க்க சென்றார். அப்போது, எதிரிகள் என்னுடைய அண்ணனை வளைத்து நிறுத்தி அடித்தார்கள். ஏற்கனவே, எங்கள் குடும்பத்தினருக்கும், எதிரிகளின் குடும்பத்தினருக்கும் கழிவுநீர் பிரச்சனை இருந்து வந்தது. எதிரி வைகுண்டமணி எனது அண்ணனை எங்கள் வீட்டு முன்னால் உள்ள ரோட்டில் வைத்து கரண்டியால் கழுத்தில் அடித்தார். எதிரிகள் எங்கள் வீட்டின் முன்பு வந்து நின்று கொண்டு கெட்ட வார்த்தை பேசினார்கள். வைகுண்டமணியும், அவருடைய அப்பாவும் என்னை அடித்தார்கள். வைகுண்டமணி என்னை கம்பால் அடித்தார். வைகுண்டமணியும், செல்லத்துரையும் என்னுடைய அம்மாவின் துணியை

பிடித்து இழுத்தார்கள். வைகுண்டமணியும், அவருடைய அப்பாவும் என்னுடைய அண்ணன் சதீஷ்குமாரையும் அடித்தார்கள். என் அம்மா கை வைத்து தடுத்தார். எதிரி வைகுண்டமணி கம்பால் எனது அம்மாவின் இடது கையில் அடித்தார். உங்களை என்றைக்கானாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார். நானும், என்னுடைய அம்மாவும், அண்ணனும் கடையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.19 13:19:11 +0530